# பெரியார் பல்கலைக்கழகம்
# PERIYAR UNIVERSITY

NAAC A++ Grade - State University – NIRF Rank 94 - State Public University Rank 40- SDGInstitutions Rank Band:11-50

SALEM–636011, TAMIL NADU,INDIA

GST NO.33AAAJP0951B1ZP


## விலைப்புள்ளி அறிவிப்பு

**எண்: PU/R/PL&D6/Phy./PC Exp.kit/25F132522/2025** **நாள்:11–02–2026**

**பொருள்:** பெரியார் பல்கலைக்கழகம் – இயற்பியல்துறை –Planck's Constant Experiment kit கொள்முதல் செய்வதற்கு விலைப்புள்ளி கோருதல் – தொடர்பாக.

*****

பெரியார் பல்கலைக்கழகத்தின் இயற்பியல்துறைக்கு Planck's Constant Experiment Kit –ஐ கீழ்க்கண்ட எண்ணிக்கை மற்றும் விவரக்குறிப்புகளின்படி கொள்முதல் செய்வதற்கு மூடி முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| Sl.No | Description | Qty. | Each Rate | Total Amount RS.Without GST (A) | GST % | GST Amount (B) | Net Total Amount Rs. With GST (A+B) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Photo Sensitive Device: Vacuum photo tube<br>Light source: Halogen tungsten lamp 12V/35W<br>Colour Filters: 635nm, 570nm, 540nm, 500nm & 460nm<br>**Accelerating Voltage: Regulated Voltage Power Supply**<br>Output: (±) 15V continuously variable through multi-turn pot<br>Display: 3 ½ digit 7-segment LED<br>Accuracy: (±)0.2%<br>**Current Detecting Unit: Digital Nano ammeter. It is high stability low current measuring instrument**<br>Range: 1000 µA, 100 µA, 10 µA & 1 µA with 100% over ranging facility<br>Resolution : 1nA at 1 µA range<br>Display: 3 ½ digit 7-segment LED<br>PowerRequirement: 220V (±) 10%, 50Hz<br>Optical Bench: The light source can be moved along it to adjust the distance between light source and phototube. Scale length is 400 mm. A drawtube is provided to install colour filters, a focus lens is fixed in the back end.<br>Warranty: 1 Year | 1 Nos | | | | | |
| | | | | | | Total | |

**<u>நிபந்தனைகள்:</u>**

1. விலைப்புள்ளிகள் 20.02.2026 அன்று மாலை 2.00 மணிக்குள் இவ்வலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும் . பெறப்படும் விலைப்புள்ளிகள் அன்று மாலை 4.00 மணிக்கு திறக்கப்படும். காலதாமதமாகப் பெறப்படும் விலைப்புள்ளிகள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. தங்கள் நிறுவன முகவரியிடப்பட்ட கடிதத்தில் மேலே கேட்கப்பட்டுள்ள பொருளுக்கு விலையை அளித்து இந்த தகவல் கடிதத்தின் நகலை இணைத்து அனுப்ப வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்கள் கேட்கப்பட்டிருப்பின் இதில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையின்படி குறிப்பிட்டிருக்க வேண்டும்.
3. விலைப்புள்ளியில் ஒவ்வொரு பொருளின் தொகையும் பைசா விதத்தில் இல்லாமல் முழுத்தொகையாக (Round Figure) இருக்க வேண்டும் . மேலும் மொத்த தொகை கண்டிப்பாக எண்ணிலும் , எழுத்திலும் எழுதப்பட்டிருக்க வேண்டும் . பெரியார் பல்கலைக்கழக பதிவாளர் அவர்கள் குறிப்பிடும் இடத்தில் பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டும் . விலைப்புள்ளியில் குறிப்பிடப்படும் தொகையானது வண்டி வாடகை, காப்பீட்டுக் கட்டணம் மற்றும் வரி ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
4. விலைப்பட்டியலில் (Invoice Bill) GST வரி தனியே காண்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் பட்டியல் தொகையில் வரி பிடித்தம் செய்யப்பட்டு மீதித்தொகை வழங்கப்படும்.
5. மேலே கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்குத் தகுந்த உத்திரவாத (Waranty) காலத்தைக் குறிப்பிட வேண்டும்.
6. விலைப்புள்ளி உறையின் மேல் " பெரியார் பல்கலைக்கழகம் – இயற்பியல் துறைக்கு Planck's Constant Experiment Kit கொள்முதல் செய்ய விலைப்புள்ளி சமர்ப்பித்தல் தொடர்பாக **எண்: PU/R/PL&D6/Phy./PCExp.kit/25F132522/2025** சமர்ப்பிக்கப்பட வேண்டிய நாள் : 20-02-2026 " என்று கண்டிப்பாக எழுதி பதிவாளர் , பெரியார் பல்கலைக்கழகம், சேலம் – 636 011 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
7. விலைப்புள்ளியில் எந்தவொரு திருத்தமும் இருக்கக்கூடாது . அவ்வாறு திருத்தம் இருந்தால் அந்த இடத்தில் முறையான சான்றொப்பமிட வேண்டும்.
8. அனைத்து கடித தொடர்புகளுக்கும் இந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எண் மற்றும் நாளைக் குறிப்பிட வேண்டும்.
9. குறிப்பிடப்படும் விலையின் மதிப்பு ஆறு மாத காலம் வரை செல்லத்தக்கதாக இருக்க வேண்டும்.
10. தேவைப்பட்டால் இறக்குமதி உரிமம் வழங்க வேண்டும்.
11. TIN / PAN மற்றும் GST சான்று எண்கள் கட்டாயம் குறிப்பிட்டிருக்க வேண்டும்.
12. எந்தவொரு காரணத்திற்கா கவும் எவ்வித முன்னறிவிப்புமின்றி விலைப்புள்ளியை இரத்து செய்வதற்குப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

**பதிவாளர்**

**பெறுதல்**

இயக்குநர்
கணினி மையம்
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் .11 ---- (இணையத்தளத்தில் விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிட)